## மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே பணி விரைவில் தொடங்கும்:

# மெட்ரோ ரெயில் சேவையை கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க ஆய்வு



சென்னை, பிப்.9–

மெட்ரோ ரெயில் சேவையை கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க ஆய்வு செய்யப்பட இருப்பதாகவும், மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையேயான பணி விரைவில் தொடங்கும் என்றும் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளதாவது:–

### கிளாம்பாக்கம் வரை நீட்டிப்பு

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் 45.01 கி.மீ. நீளமுள்ள 2 வழித்தடங்கள் இம்மாதம் முதல் மக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக வர உள்ளன. திருவொற்றியூர் மற்றும் விம்கோ நகர் வரையிலான 9 கி.மீ. நீளமுள்ள முதற்கட்டத்தின் நீட்டிப்பு பணிகள் நிறைவுற்று, 2020–ம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

2018–2019–ம் ஆண்டில் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்காக ரூ.1,950 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, அறிவித்தபடி, மீனம்பாக்கம் விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் மெட்ரோ பஸ் பணிமனை வரை மெட்ரோ ரெயில் திட்ட வழித்தடத்தை நீட்டிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் 2–ம் கட்டத்தின் கீழ், 118.90 கி.மீ. நீளமுள்ள 3 மெட்ரோ ரெயில் வழித்தடங்களில் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும், மாதவரம் முதல் சென்னை கோயம்பேடு பஸ் நிலையம் வரையிலுமான 52.01 கி.மீ. நீளமுள்ள வழித்தடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை ரூ.20,196 கோடி நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

### மொத்த மதிப்பீடு

இதற்கு மாநில அரசும் ரூ.40,941 கோடி மொத்த மதிப்பீட்டில் இத்திட்டப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

மற்ற வழித்தடங்களுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் 2–ம் கட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் சென்னை பெருநகர பகுதிகளில் மெட்ரோ ரெயிலின் சேவைப்பகுதி 172.91 கி.மீ.யாக அதிகரித்து, பொது போக்குவரத்தில் மெட்ரோ ரெயிலின் பங்கு கணிசமாக அதிகரிக்கும். இந்த திட்டத்திற்காக பங்கு மூலதனம் மற்றும் கடனாக மொத்தம் ரூ.2,681 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.